**மோட்டார் வாகன விபத்து கோரிக்கை தீர்ப்பாயம் மற்றும் சார்பு நீதிமன்றம், வேடசந்தூர், திண்டுக்கல் மாவட்டம்.**

**முன்னிலை : திரு. கே. விஸ்வநாதன், பி.எஸ்சி., பி.எல்.,**
**மோட்டார் வாகன விபத்து கோரிக்கை தீர்ப்பாயர்**
**மற்றும் சார்பு நீதிபதி, வேடசந்தூர்**

**2026 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 11 ஆம் நாள் செவ்வாய்கிழமை**

**(திருவள்ளுவராண்டு 2057 ஸ்ரீபராபவ வருடம் ஆடி மாதம் 26 ஆம் நாள் )**

**மோ.வா.வி.அசல் மனு எண் : 17/2016**

**[CNR No : TNDG0B - 000231 – 2016]**

P. குமரேசன் --- மனுதாரர்

/எதிர்/

1. பழனி

2. கிளை மேலாளர்,
ரிலையன்ஸ் ஜென்ரல் இன்சூரன்ஸ் கம்பெனி லிமிடெட்
கோயமுத்தூர். --- எதிர்மனுதாரர்கள்

இம்மனுவானது 01.07.2026 அன்று இந்நீதிமன்றத்தின் முன்பாக இறுதி விசாரணைக்கு வந்ததில், மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திருவாளர் A.செல்வம் அவர்கள் முன்னிலையாகியும், 1–ம் எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திருவாளர் V.P.ரெங்கராஜ் அவர்கள் முன்னிலையாகியும், 2–ம் எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திருவாளர் A.M. அப்துல்கரீம் அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பிலும் முன்னிலைப்படுத்தப்பட்ட சாட்சிய, சான்றாவணங்களை பரிசீலனை செய்தும், இருதரப்பு வாதத்தினை கேட்டும் இன்று இந்நீதிமன்றம் கீழ்கண்டவாறு வழங்கும்.

**உத்தரவு**

மனுதாரருக்கு எதிர்மனுதாரர்கள் மொத்த இழப்பீடாக ரூ.15,00,000/–ல் முதல் கட்ட நஷ்ட ஈடாக ரூ.25,000/–ஐ உடனடியாக மனுதாரருக்கு கொடுக்க

உத்தரவிடக்கோரியும், மீதித் தொகையாக ரூ.14,75,000/—ஐ இம்மனு விசாரணை முடியும் வரையில் இம்மனு தாக்கல் செய்த தேதியிலிருந்து வட்டியுடன், மனுவின் செலவுத் தொகை கோரியும் மற்றும் இதர பரிகாரங்கள்கோரியும் தமிழ்நாடு மோட்டார் வாகன விபத்துக்கள் சட்டப்பிரிவு 166(1)(ஏ)—ன்படி வாகன விபத்துக்கள் உரிமை கோரிக்கை விதி 3—ன்படியும், திருத்தல் 54/1994—ன்படியும் மனுதாரரால் இழப்பீடு கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

<u>2. மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனுவின் சுருக்கம் பின்வருமாறு :—</u>

2.1. மனுதாரர் ஒட்டன்சத்திரம் கிறிஸ்டியன் பாலிடெக்னிக் கல்லூரியில் 2 ஆம் ஆண்டு படித்து வருகிறார். மனுதாரரின் தகப்பனார் விவசாய வேலை பார்த்து வருகிறார். கடந்த 06.10.2012 அன்று மனுதாரரின் தகப்பனார் வடமதுரையில் உள்ள மெடிக்கல் கடையில் மருந்து வாங்கிக்கொண்டு இருப்பதாகவும், தன்னை அழைத்துச் சென்று ஊருக்குபோகுமாறும் மனுதாரரிடம் சொல்லியுள்ளார். மனுதாரருக்கு இருசக்கர வாகனம் ஓட்டும் உரிமம் உள்ளது. மனுதாரர் அன்று மாலை சுமார் 6.45 மணியளவில் அவரது வீட்டில் இருந்து வடமதுரைக்கு செல்லலாம் என்று TN 67 F 9162 Hero Honda இருசக்கர வாகனத்தை மனுதாரர் ஓட்டிக்கொண்டு வடமதுரை ஏ.வி.பட்டி சாலை, வி.கே.எஸ்.நகர் அருகே ஏ.வி.பட்டி சாலையில் ரோட்டின் இடது ஓரமாக மெதுவாகவும், கவனமாகவும், ஹாரன் அடித்தும் ஓட்டிச் சென்று கொண்டிருந்தபோது அப்போது சுமார் 7.15 மணியளவில் எதிர்திசையில் இருந்து வந்த TN 57 L 0022 என்ற பஜாஜ் பிளாட்டினம் இருசக்கர வாகனத்தை ஓட்டிய 1—ம் எதிர்மனுதாரரின் மகன் கருப்பையா என்பவர் இருசக்கர வாகனம் ஓட்டும் உரிமம் இல்லாமல் வாகனத்தை ஒட்டிவர அவருடைய அக்கா மகன் அருண்பிரசாத், அருண்பிரசாத்தின் சகோதரி ஆகிய இருவரும் கருப்பையாவுக்கு பின்னால் அமர்ந்து வர வண்டியில் அதிவேகமாகவும், ஹாரன் அடிக்காமலும், கவனக்குறைவாகவும் மோட்டார் வாகன சட்டத்தின் விதிமுறைகளை மீறி வாகனத்தை ஓட்டிச் சென்று மனுதாரரின் இருசக்கர வாகனத்தின் மீது அதிவேகத்தை தாக்குப்பிடிக்க முடியாமல் மோதிவிட்டார். இதனால் மனுதாரர் வண்டியில் இருந்து கீழே விழுந்துவிட்டார். அதனால் மனுதாரருக்கு தலை, முகம், வாய், மூக்கு மற்றும் உடல் முழுவதும் பலத்த

காயம் ஏற்பட்டது. மேற்படி சம்பவத்தை பார்த்த போஜனம்பட்டியை சேர்ந்த ஆறுமுகம் மகன் மணி, சிக்கணன் மகன் செந்தில்குமார் மற்றும் விருதுநகர் காரியாபட்டியை சேர்ந்த முத்துச்சாமி மகன் செந்தில்குமார் மற்றும் பாலமுருகன் மனுதாரரை அந்த பக்கமாக வந்த ஆட்டோவில் ஏற்றி வடமதுரைக்கு கொண்டு சென்று அங்கிருந்து தனியார் ஆம்னி வேன் மூலமாக திண்டுக்கல் பழனி ரோடு ஜே.சி.பி. மருத்துவமனையில் மனுதாரரை சேர்த்தார்கள். அப்போது மனுதாரரின் சகோதரர் வடிவேல் மற்றும் அவரது தகப்பனார், ஊர்க்காரர்கள் மருத்துவமனைக்கு வந்துள்ளார்கள்.

2.2. அன்று முழுவதும் மனுதாரர் மயக்க நிலையில் இருந்துள்ளார். அடுத்த நாள் மயக்கம் தெளிந்தவுடன் வடமதுரை காவல் நிலைய அதிகாரிகள் மனுதாரரை வந்து விசாரித்தபோது மேற்படி கருப்பையா என்பவரின் கவனக்குறைவால் தான் விபத்து நடந்தது என்று வாக்குமூலம் சொல்லியுள்ளார். மனுதாரருக்கு விபத்தினால் தலை பகுதியில் மூளை பாதிப்பு ஏற்பட்டுள்ளதாகவும், முகத்தில் உள்ள எலும்பு உடைந்துள்ளதாகவும், வாய் பகுதியில் உள்ள பல் தாடை உடைந்துவிட்டதாகவும், மூக்கு உடைந்துவிட்டதாகவும் ஆப்ரேசன் செய்ய வேண்டுமென்று மருத்துவர் அறிவுறுத்தி மனுதாரருக்கு ஆப்ரேசன் நடந்தது. மனுதாரர் கடந்த 06.10.2012 ஆம் தேதியிலிருந்து 15.10.2012 ஆம் தேதி வரை மேற்படி மருத்துவமனையில் உள்நோயாளியாக இருந்து சிகிக்சை பெற்று சுமார் ரூ.3,00,000/—க்கு மேல் சிகிச்சைக்கும், மருந்துக்கும் பணம் செலவழித்தும், தொடர் சிகிச்சை செய்தும், மருத்துவர் ஆலோசனைப்படி தொடர் சிகிச்சையில் இருந்து வந்துள்ளார். விபத்திற்கு பின்பு TN 57 L 0022 என்ற இருசக்கர வாகனத்தை ஓட்டி வந்த கருப்பையா என்பவரின் கவனக்குறைவால் தான் விபத்து ஏற்பட்டது என்பதற்கு காவல்துறை அதிகாரியிடம் வாக்குமூலம் கொடுத்த பின்பும், வடமதுரை காவல் அதிகாரிகள் சரியாக புலன் விசாரணை செய்யாமல் உண்மையை மாற்றி மேற்படி கருப்பையா என்பவருக்கு உதவி செய்ய வேண்டுமென்ற எண்ணத்தில் சட்டத்திற்கு புறம்பான வகையில் மனுதாரர் மீது குற்ற எண்.344/2012 இ.த.ச. பிரிவுகள் 279, 337, 304(ஏ)—ன்படி வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள். அதன்பின்பு மனுதாரர் சம்பவத்தை கண்ணுற்ற சாட்சிகளை

விசாரித்து உண்மை தெரிந்து விசாரிக்குமாறு வடமதுரை காவல்துறை அதிகாரிகளிடம் மனுதாரரின் தகப்பனாருடன் சென்று சொன்னபோது விபத்தில் கருப்பையா என்பவரின் கவனக்குறைவால் தான் விபத்து ஏற்பட்டது என்றும், அவர் இறந்துவிட்டதால் அவரது குடும்பத்தாருக்கு நஷ்ட ஈடு கிடைக்க வேண்டுமென்று மனுதாரர் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும் சொல்லியுள்ளார்கள். உண்மையில் மேற்படி TN 57 L 0022 என்ற வாகனத்தை ஓட்டி வந்த 1–ம் எதிர்மனுதாரருக்கு சொந்தமான வாகனத்தை ஓட்டிய 1–ம் எதிர்மனுதாரரின் மகன் கருப்பையா என்பவரின் கவனக்குறைவால் தான் மேற்படி விபத்து ஏற்பட்டது. 1–ம் எதிர்மனுதாரர் சம்பவ காலத்தில் 2–ம் மனுதாரரின் நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்டுள்ளதால் 1, 2 எதிர்மனுதாரர்கள் இருவரும் சேர்ந்து அல்லது தனித்தனியாக மனுதாரருக்கு ரூ.15,00,000/– செலுத்த கடமைப்பட்டவர்கள் ஆவார்கள்.

<u>3. 1–ம் எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்துள்ள எதிரையின் சுருக்கம் பின்வருமாறு:–</u>

3.1. மனுதாரர் மனுவில் கேட்கும் பரிகாரம் சட்டபடி நிலைக்கத்தக்கதல்ல. மனுதாரரின் தொழில், வயது, வருமானம், மருத்துவ சிகிச்சை செலவு, வருமான இழப்பு, மருத்துவச் செலவு, போக்குவரத்து செலவு, சேதமதிப்பு ஆகிய அனைத்தும் மனுவிற்காக உபயர்வுபடுத்தி சொல்லப்பட்டுள்ளது. மனுதாரர் மனுவில் குறிப்பிட்டுள்ள சங்கதிகள் அனைத்தும் பொய்யானவை. 1–ம் எதிர்மனுதாரரின் மகன் மேற்படி விபத்தில் இறந்துபோன கருப்பையா 06.10.2012 அன்று காலை 07.15 மணியளவில் TN 57 L 0022 என்ற இருசக்கர வாகனத்தில் அருண் பிரசாத் என்ற குழந்தையை பின்புரம் உட்கார வைத்துக்கொண்டு வடமதுரை ஏ.வி.பட்டி சாலையில், வி.கே.எஸ்.நகர் அருகே ஏ.வி.பட்டி நோக்கி சாலையின் இடது ஓரமாக மெதுவாக சென்று கொண்டிருக்கும்போது எதிர்திசையிலிருந்து வந்த TN 67 F 9162 என்ற இருசக்கர வாகனத்தை மனுதாரர் அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஹாரன் அடிக்காமல் கவனக்குறைவாகவும், வலதுபுறம் ஏறி ஓட்டி வந்து 1–ம் எதிர்மனுதாரரின் மகன் ஓட்டிய வாகனத்தின் மீது மோதி விபத்து ஏற்பட்டதில் 1–ம் எதிர்மனுதாரரின் மகன் கருப்பையாவுக்கு தலை, நெற்றி, முகம் ஆகிய பகுதிகளில் கொடுங்காயங்கள்

ஏற்பட்டுள்ளது. உடனடியாக திண்டுக்கல் ஜே.சி.பி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி இறந்துள்ளார். மேலும் மேற்படி விபத்தில் அருண்பிரசாத் என்பவருக்கும் கொடுங்காயம் ஏற்பட்டுள்ளது. இந்த விபத்து பற்றி 1–ம் எதிர்மனுதாரர் வடமதுரை காவல் நிலையத்தில் மனுதாரர் மீது கொடுத்த புகாரின் பேரில் வடமதுரை காவல் துறையின் நிலையக் குற்ற எண்.344/2012–ல் மனுதாரர் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. 1–ம் எதிர்மனுதாரரின் மகன் கருப்பையா மேற்படி விபத்தில் இறந்துவிட்டதற்காக இந்நீதிமன்றத்தில் மனுதாரர் மற்றும் முருகன் என்பவர் மீது 1–ம் எதிர்மனுதாரர் M.A.C.O.P.No.324/2012 தாக்கல் செய்து நிலுவையில் இருந்து வருகிறது. 1–ம் எதிர்மனுதாரர், மனுதாரர் மீது தாக்கல் செய்துள்ள மேற்படி வழக்கிலிருந்து தப்பிச் செல்வதற்காக இந்த வழக்கை பொய்யான காரணங்களைக் கூறி மனுதாரர் தாக்கல் செய்துள்ளார். 1–ம் எதிர்மனுதாரர் TN 57 L 0022 என்ற அவரது இருசக்கர வாகனத்தை 2–ம் எதிர்மனுதாரரின் காப்பீட்டு நிறுவனத்தில் காப்பீடு செய்துள்ளார். மேலும் 1–ம் எதிர்மனுதாரரின் மகன் இறந்துபோன கருப்பையாவுக்கு ஓட்டுனர் உரிமம் உள்ளது. 1–ம் எதிர்மனுதாரரின் மகன் ஓட்டிய வாகனத்தின் மீது மனுதாரர் அவரது வாகனத்தில் மோதியதால் 1–ம் எதிர்மனுதாரர் அவரது ஒரே மகனை இழந்து எவ்வித துணையுமின்றி மிகுந்த கஷ்ட ஜீவனம் செய்து வருகிறார். மனுதாரரின் அஜாக்கிரதையால் கவனக்குறைவால், அதிவேகத்தால் ஏற்பட்ட மேற்படி விபத்திற்கு மனுதாரர் உண்மையை மறைத்து 1–ம் எதிர்மனுதாரரிடமிருந்து நஷ்ட ஈடு கேட்டு தாக்கல் செய்துள்ள மனு தள்ளுபடியாக வேண்டும்

<u>4. 2–ம் எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிர்உரையின் சுருக்கம் பின்வருமாறு : –</u>

4.1. 2–ம் எதிர்மனுதாரர் தரப்பில் ஒப்புக்கொள்ளப்படும் சங்கதிகளைத் தவிர மற்ற சங்கதிகள் அனைத்தும் பொய்யானவை. 2–ம் எதிர்மனுதாரர் முன்வைத்துள்ள பல்வேறு வாதங்கள் மற்றும் ஆட்சேபணைகளுக்கு எவ்வித பாதிப்பும் இல்லாமல், எவ்வித பொறுப்பையும் ஒப்புக்கொள்ளாமல் வருமான வரி சட்டத்தின்படி கட்டாயமாக மனுதாரர் அவரது PAN எண் விபரங்களை சமர்ப்பிக்க வேண்டும். நீதிமன்றம் மனுதாரருக்கு இடைக்காலமாகவோ அல்லது இறுதியாகவோ ஏதேனும் இழப்பீடு

வழங்கினால் அந்த இழப்பீட்டுத் தொகை மனுதாரரின் வங்கிக் கணக்கில் NEFT / RTGS முறையின் மூலம் நேரடியாக செலுத்த உத்தரவிடவேண்டும். மேலும் மனுதாரர் தனது வங்கிக் கணக்கு விபரங்கள் மற்றும் ஆதார் அட்டை விபரங்களை தாக்கல் செய்யவேண்டும். மனுதாரர் கோரியுள்ள இழப்பீட்டுத் தொகை மிகவும் அதிகமானது. குற்றம்சாட்டப்பட்ட வாகன ஓட்டுனரின் கவனக்குறைவு நிரூபிக்கப்பட்டு மனுதாரருக்கு ஆதரவாகவும், இந்த எதிர்மனுாரருக்கு எதிராகவும் உத்தரவு வழங்கப்பட்டால் மனுதாரருக்கு வட்டி வழங்கத் தகுதி இருப்பதாக கண்டறியப்பட்டால் அந்த வட்டி வங்கிகளில் வைப்புத் தொகைகளுக்கு நடைமுறையில் வழங்கப்படும் வட்டி விகிதத்தின்படி வழங்கப்பட வேண்டும். மனுதாரர் எந்தவித இழப்பீட்டிற்கோ அல்லது வட்டிக்கோ உரிமையுடையவர் அல்ல. மருத்துவ ஆவணங்கள், மாற்றுத்திறனாளர் சான்றிதழ் அல்லது பிற ஆவணங்களை தாக்கல் செய்ய ஏற்படுத்திய காலதாமத காலத்திற்கு எந்தவித வட்டியும் வழங்கக்கூடாது. மேலும் எதிர்மனுதாரரால் ஏற்படாத அல்லது எதிர்மனுதாரரின் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்ட காரணங்களால் ஏற்பட்ட தாமதக் காலமும் வட்டி கணக்கீட்டிலிருந்து விலக்கப்பட வேண்டும். மனுவில் விபத்து நடந்த விதம் குறித்து கூறப்பட்டுள்ள விபரங்கள் சரியானவை அல்ல. அதனை மனுதாரரே நிரூபிக்க வேண்டும். இந்த எதிர்மனுதாரரின் மீது பொறுப்பை சுமத்தும் நோக்கில் முக்கியமான உண்மைகளை மனுதாரர் மறைத்துள்ளார். காயமடைந்ததாகக் கூறப்படும் நபரின் வயது, தொழில் மற்றும் மாத வருமானம் ஆகியவற்றை இந்த எதிர்மனுதாரரால் ஒப்புக்கொள்ளவில்லை. ஏற்பட்ட காயங்களுக்கு நேரடி மற்றும் முக்கிய காரணம் இந்த விபத்தே என்பதை மனுதாரர் ஆவணங்களுடன் நிரூபிக்க வேண்டும்.

4.2. 06.10.2012 அன்று மாலை 6.45 மணியளவில் வி.கே.எஸ்.நகர், வடமதுரை – ஏ.வி.பட்டி பிரதான சாலை அருகே காயமடைந்ததாகக் கூறப்படும் 1–ம் எதிர்மனுதாரர், பதிவு எண்.TN 67 F 9162 என்ற Hero Honda இருசக்கர வாகனத்தில் மேற்கு திசை நோக்கி சென்று கொண்டிருந்தபோது பதிவு எண்.TN 57 L 0022 கொண்ட பஜாஜ் பிளாட்டினா இருசக்கர வாகனம் ஓட்டப்பட்டதாகக் கூறப்படும் விபரங்கள் அனைத்து குற்றச்சாட்டுகளும் பொய்யானவை. விபத்து நடைபெற்ற விதம்

மனுதாரரால் சரியான முறையில் விவரிக்கப்படவில்லை. 1–ம் எதிர்மனுதாரரின் கருத்துப்படி மோட்டார் சைக்கிளை ஓட்டியதாகக் கூறப்படும் மனுதாரர் குமரேசன் மட்டுமே இந்த விபத்திற்கு காரணமாவார். 1–ம் எதிர்மனுதாரரின் வாகன ஓட்டுனரான கருப்பையா, ஹாரன் அடித்துக்கொண்டு போக்குவரத்து விதிகளை முறையாக கடைப்பிடித்து மெதுவாகவும், கவனமாகவும் வாகனத்தை ஓட்டி வந்தார். அந்த நேரத்தில் காயமடைந்ததாக கூறப்படும் மனுதாரர் ஓட்டுனர் உரிமம் மற்றும் காப்பீடு இன்றி மிகுந்த வேகத்தில் ஜிக் ஜாக் முறையில் வாகனத்தை ஓட்டியபோது திடீரென வலது பக்கம் திரும்பி தனது கட்டுப்பாட்டை இழந்து 1–ம் எதிர்மனுதாரரின் வாகனத்தில் மோதியதால் இந்த விபத்து ஏற்பட்டது. மேற்படி விபரங்களை மறைத்து 1–ம் எதிர்மனுதாரரிடமிருந்து சட்டவிரோதமாக பணம் பெறும் நோக்கத்துடன் பொய்யாக தயார் செய்யப்பட்டுள்ளது. மேலும் மோட்டார் சைக்கிளை ஓட்டியதாகக் கூறப்படும் மனுதாரர் காப்பீடு இல்லாமல் வாகனத்தை ஓட்டியுள்ளார். மேற்கண்ட சூழ்நிலைகள் அனைத்தும் மனுதாரர் குமரேசனின் தவறால் மட்டுமே ஏற்பட்டது. வடமதுரை காவல்துறை மனுதாரருக்கு எதிராக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து விசாரணை முடிந்த பின் மனுதாரருக்கு எதிராக குற்றப்பத்திரிக்கையும் தாக்கல் செய்துள்ளது. எனவே 1–ம் எதிர்மனுதாரரின் மோட்டார் சைக்கிள் ஓட்டுனர் இந்த விபத்துக்கு எந்தவிதத்திலும் பொறுப்பல்ல. TN 57 L 0022 கொண்ட பஜாஜ் பிளாட்டினா மோட்டார் சைக்கிள் இந்த எதிர்மனுதாரரிடம் 10.09.2011 முதல் 09.09.2012 வரை மட்டுமே காப்பீடு செய்யப்பட்டிருந்தது. ஆனால் விபத்து 06.10.2012 அன்று நடைபெற்றுள்ளது. எனவே விபத்து நடந்த நாளில் மேற்படி இருசக்கர வாகனம் இந்த எதிர்மனுதாரரின் காப்பீட்டில் இல்லை. இதனால் 1–ம் எதிர்மனுதாரருக்கும், 2–ம் எதிர்மனுதாரருக்கும் இடையில் நடைமுறையில் எந்த காப்பீட்டு ஒப்பந்தமும் இல்லை. மனுதாரருக்கு ஏதேனும் இழப்பீடு வழங்க உத்தரவிட்டால் அந்த இழப்பீட்டை வழங்குவதற்கு 2–ம் எதிர்மனுதாரர் எந்த விதத்திலும் பொறுப்பல்ல. எனவே 2–ம் எதிர்மனுதாரரை இவ்வழக்கில் தவறாக ஒரு தரப்பினராகச் சேர்த்துள்ளதால் 2–ம் எதிர்மனுதாரருக்கு எதிராக தள்ளுபடி செய்யவேண்டும். மனுதாரர் மனுவில் சொல்லியுள்ள மற்ற சங்கதிகள் அனைத்தும் பொய்யானது. மேற்படி விபத்து இருசக்கர வாகனத்தை ஓட்டியதாகக் கூறப்படும்

காயமடைந்த நபரின் தவறால் மட்டுமே ஏற்பட்டது. எனவே மனுதாரர் மோட்டார் சைக்கிளின் உரிமையாளரையும் எதிர்மனுதாரராக சேர்த்திருக்க வேண்டும். ஆனால் மனுதாரர் வேண்டுமென்றே அந்த உரிமையாளரை எதிர்மனுதாரராக சேர்க்கவில்லை. ஆகையால் தேவையான தரப்பினரை சேர்க்காத காரணத்தால் மனு சட்டப்படி நிலைநிற்கத்தக்கதல்ல. 1–ம் எதிர்மனுதாரரான வாகன உரிமையாளர் விபத்து குறித்து இந்த எதிர்மனுதாரருக்கு தகவல் தெரிவிக்கவில்லை. மேலும் வாகனத்தின் பதிவுகள் மற்றும் ஆவணங்களை சரிபார்ப்பதற்காகவும் தாக்கல் செய்யவில்லை. விபத்து நடைபெற்ற தேதியில் 1–ம் எதிர்மனுதாரரின் மோட்டார் சைக்கிளை ஓட்டிய ஓட்டுனரிடம் அந்த வாகனத்தை ஓட்டுவதற்கான ஓட்டுனர் உரிமம் இல்லை. மனுதாரர் கோரியுள்ள ரூ.15,00,000/– இழப்பீட்டுத் தொகை மிகவும் அதிகமானது. எனவே மனு தள்ளுபடியாக வேண்டும்.

**5. இவ்வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட வாதுரை மற்றும் இருதரப்பு கற்றறிந்த வழக்கறிஞர்கள் முன்வைத்த வாதத்தின் அடிப்படையின் கீழ் வழக்கு கோப்புகள் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டது.**

**இம்மனுவில் தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சனை யாதெனில்,**

1. இந்த விபத்துக்கு காரணம் யார்?
2. எதிர்மனுதாரர்களைப் பொறுத்து இந்த வழக்கு நிலைநிற்கத்தக்கதா?
3. மனுதாரர் இழப்பீடு பெறத்தக்கவரா? அவ்வாறெனில் அவர் பெறக்கூடிய இழப்பீட்டு தொகையின் அளவு என்ன?

**6. இருதரப்பிலும் முன்னிலைப் படுத்திய சாட்சிய சான்றாவண விவரங்கள் :–**

மனுதாரர் தரப்பில், மனுதாரர் திரு. குமரேசன் ம.சா.1 ஆகவும், திரு.செந்தில்நாதன் என்பவர் ம.சா.2 ஆகவும் விசாரிக்கப்பட்டு, ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.5 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. 1–ம் எதிர்மனுதாரர் தரப்பில் 1–ம் எதிர்மனுதாரர் திரு. பழனி எ.ம.சா.1 ஆகவும், 2–ம் எதிர்மனுதாரர் தரப்பில் திரு. ராமர் என்பவர் எ.ம.சா.2 ஆகவும் விசாரிக்கப்பட்டு,

எ.ம.சா.ஆ.1 முதல் எ.ம.சா.ஆ.3 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

7. மனுதாரர் தரப்பு விவாத சுருக்கம் :–

**மனுதாரர் தரப்பு வழக்கறிஞர் தனது வாதத்தில்,** மனுவினை ஒத்துரைத்து மனுதாரர் கடந்த 06.10.2012 அன்று மனுதாரரின் தகப்பனார் வடமதுரையில் உள்ள மெடிக்கல் கடையில் மருந்து வாங்கிக்கொண்டு இருப்பதாகவும், தன்னை அழைத்துச் சென்று ஊருக்குபோகுமாறும் மனுதாரரிடம் சொல்லியுள்ளதால், மனுதாரர் அன்று மாலை சுமார் 6.45 மணியளவில் அவரது வீட்டில் இருந்து வடமதுரைக்கு செல்லலாம் என்று TN 67 F 9162 Hero Honda இருசக்கர வாகனத்தை மனுதாரர் ஓட்டிக்கொண்டு வடமதுரை ஏ.வி.பட்டி சாலை, வி.கே.எஸ்.நகர் அருகே ஏ.வி.பட்டி சாலையில் ரோட்டின் இடது ஓரமாக மெதுவாகவும், கவனமாகவும், ஹாரன் அடித்தும் ஓட்டிச் சென்று கொண்டிருந்தபோது அப்போது சுமார் 7.15 மணியளவில் எதிர்திசையில் இருந்து வந்த TN 57 L 0022 என்ற பஜாஜ் பிளாட்டினம் இருசக்கர வாகனத்தை ஓட்டிய 1–ம் எதிர்மனுதாரரின் மகன் கருப்பையா என்பவர் இருசக்கர வாகனம் ஓட்டும் உரிமம் இல்லாமல் வாகனத்தை ஒட்டிவர அவருடைய அக்கா மகன் அருண்பிரசாத், அருண்பிரசாத்தின் சகோதரி ஆகிய இருவரும் கருப்பையாவுக்கு பின்னால் அமர்ந்து வர வண்டியில் அதிவேகமாகவும், ஹாரன் அடிக்காமலும், கவனக்குறைவாகவும் மோட்டார் வாகன சட்டத்தின் விதிமுறைகளை மீறி வாகனத்தை ஓட்டிச் சென்று மனுதாரரின் இருசக்கர வாகனத்தின் மீது அதிவேகத்தை தாக்குப்பிடிக்க முடியாமல் மோதி விபத்து ஏற்பட்டுவிட்டது. அதனால் மனுதாரருக்கு தலை, முகம், வாய், மூக்கு மற்றும் உடல் முழுவதும் பலத்த காயம் ஏற்பட்டு, திண்டுக்கல் பழனி ரோடு ஜே.சி.பி. மருத்துவமனையில் 06.10.2012 ஆம் தேதியிலிருந்து 15.10.2012 ஆம் தேதி வரை மேற்படி மருத்துவமனையில் உள்நோயாளியாக இருந்து சிகிக்சை பெற்று சுமார் ரூ.3,00,000/–க்கு மேல் மருத்துவ செலவு செய்துள்ளார். விபத்திற்கு முன்பு மனுதாரர் நோய் நொடியின்றி நல்ல ஆரோக்கியமான முறையில் வாழ்ந்து வந்தார். விபத்து சமயத்தில் மனுதாரருக்கு 25 வயது நடைபெற்று வந்தது. மனுதாரர் விபத்தின்போது ஒட்டன்சத்திரம் கிறிஸ்டியன் பாலிடெக்னிக் கல்லூரியில் இரண்டாம் ஆண்டு படித்து

வருகிறார். மேற்படி விபத்தினால் மனுதாரருக்கு ஊனம் ஏற்பட்டு மிகுந்த சிரமத்துடன் வாழ்ந்து வருகிறார். மேற்படி விபத்து மேற்படி 1–ம் எதிர்மனுதாரரின் கவனக்குறைவாலேயே ஏற்பட்டது. அவர் தனது வாகனத்தை அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும், சாலை விதிகளை கடைப்பிடிக்காமலும் ஓட்டியதால் மட்டுமே இந்த விபத்து ஏற்பட்டது. 2–ம் எதிர்மனுதாரர், 1–ம் எதிர்மனுதாரரின் இருசக்கர வாகனத்தின் காப்பீட்டாளர் என்பதால், 2–ம் எதிர்மனுதாரர், மனுதாரருக்கு ஏற்பட்ட காயங்களுக்காக ரூ.15,00,000/–த்தை 2–ம் எதிர்மனுதாரர் செலுத்த வேண்டும் என்றும் வாதிடப்பட்டது..

<u>8. 1–ம் திர்மனுதாரர் தரப்பு விவாத சுருக்கம் :–</u>

**எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதத்தில்**, 1–ம் எதிர்மனுதாரரின் மகன் மேற்படி விபத்தில் இறந்துபோன கருப்பையா 06.10.2012 அன்று காலை 07.15 மணியளவில் TN 57 L 0022 என்ற இருசக்கர வாகனத்தில் அருண் பிரசாத் என்ற குழந்தையை பின்புரம் உட்கார வைத்துக்கொண்டு வடமதுரை ஏ.வி.பட்டி சாலையில், வி.கே.எஸ்.நகர் அருகே ஏ.வி.பட்டி நோக்கி சாலையின் இடது ஓரமாக மெதுவாக சென்று கொண்டிருக்கும்போது எதிர்திசையிலிருந்து வந்த TN 67 F 9162 என்ற இருசக்கர வாகனத்தை மனுதாரர் அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஹாரன் அடிக்காமல் கவனக்குறைவாகவும், வலதுபுறம் ஏறி ஓட்டி வந்து 1–ம் எதிர்மனுதாரரின் மகன் ஓட்டிய வாகனத்தின் மீது மோதி விபத்து ஏற்பட்டதில் 1–ம் எதிர்மனுதாரரின் மகன் கருப்பையாவுக்கு தலை, நெற்றி, முகம் ஆகிய பகுதிகளில் கொடுங்காயங்கள் ஏற்பட்டு, திண்டுக்கல் ஜே.சி.பி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி இறந்துள்ளார். மேற்படி விபத்தில் அருண்பிரசாத் என்பவருக்கும் கொடுங்காயம் ஏற்பட்டுள்ளது. 1–ம் எதிர்மனுதாரரின் மகன் கருப்பையா மேற்படி விபத்தில் இறந்துவிட்டதற்காக இந்நீதிமன்றத்தில் மனுதாரர் மற்றும் முருகன் என்பவர் மீது 1–ம் எதிர்மனுதாரர் M.A.C.O.P.No.324/2012 தாக்கல் செய்து நிலுவையில் இருந்து வருகிறது. மனுதாரரின் அஜாக்கிரதையால் கவனக்குறைவால், அதிவேகத்தால் ஏற்பட்ட மேற்படி விபத்திற்கு மனுதாரர்

உண்மையை மறைத்து 1–ம் எதிர்மனுதாரரிடமிருந்து நஷ்ட ஈடு கேட்டு தாக்கல் செய்துள்ள மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும் என்பதாக எதிர்வாதிடப்பட்டது.

<u>**9. 2–ம் திர்மனுதாரர் தரப்பு விவாத சுருக்கம் :–**</u>

**2–ம் எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதத்தில்**, 1–ம் எதிர்மனுதாரரின் கருத்துப்படி மோட்டார் சைக்கிளை ஓட்டியதாகக் கூறப்படும் மனுதாரர் குமரேசன் மட்டுமே இந்த விபத்திற்கு காரணமாவார். 1–ம் எதிர்மனுதாரரின் வாகன ஓட்டுனரான கருப்பையா, ஹாரன் அடித்துக்கொண்டு போக்குவரத்து விதிகளை முறையாக கடைப்பிடித்து மெதுவாகவும், கவனமாகவும் வாகனத்தை ஓட்டி வந்தார். அந்த நேரத்தில் காயமடைந்ததாக கூறப்படும் மனுதாரர் ஓட்டுனர் உரிமம் மற்றும் காப்பீடு இன்றி மிகுந்த வேகத்தில் ஜிக் ஜாக் முறையில் வாகனத்தை ஓட்டியபோது திடீரென வலது பக்கம் திரும்பி தனது கட்டுப்பாட்டை இழந்து 1–ம் எதிர்மனுதாரரின் வாகனத்தில் மோதியதால் இந்த விபத்து ஏற்பட்டது. மேலும் மோட்டார் சைக்கிளை ஓட்டியதாகக் கூறப்படும் மனுதாரர் காப்பீடு இல்லாமல் வாகனத்தை ஓட்டியுள்ளார். மேற்கண்ட சூழ்நிலைகள் அனைத்தும் மனுதாரர் குமரேசனின் தவறால் மட்டுமே ஏற்பட்டது. வடமதுரை காவல்துறை மனுதாரருக்கு எதிராக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து விசாரணை முடிந்த பின் மனுதாரருக்கு எதிராக குற்றப்பத்திரிக்கையும் தாக்கல் செய்துள்ளது. எனவே 1–ம் எதிர்மனுதாரரின் மோட்டார் சைக்கிள் ஓட்டுனர் இந்த விபத்துக்கு எந்தவிதத்திலும் பொறுப்பல்ல. TN 57 L 0022 கொண்ட பஜாஜ் பிளாட்டினா மோட்டார் சைக்கிள் இந்த எதிர்மனுதாரரிடம் 10.09.2011 முதல் 09.09.2012 வரை மட்டுமே காப்பீடு செய்யப்பட்டிருந்தது. ஆனால் விபத்து 06.10.2012 அன்று நடைபெற்றுள்ளது. எனவே விபத்து நடந்த நாளில் மேற்படி இருசக்கர வாகனம் இந்த எதிர்மனுதாரரின் காப்பீட்டில் இல்லை. எனவே மனுதாரர் மோட்டார் சைக்கிளின் உரிமையாளரையும் எதிர்மனுதாரராக சேர்த்திருக்க வேண்டும். ஆனால் மனுதாரர் வேண்டுமென்றே அந்த உரிமையாளரை எதிர்மனுதாரராக சேர்க்கவில்லை. எனவே மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும் என்பதாக எதிர்வாதிடப்பட்டது.

**<u>10. தீர்மானிக்கப்படவேண்டிய வினா எண்கள். 1 மற்றும் 2–க்கான தீர்வு:–</u>**

இருதரப்பு கற்றறிந்த வழக்கறிஞர்களின் இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது.

10.1. விபத்திற்கு யார் காரணம் என்பது குறித்து பரிசீலிக்கையில், மனுதாரரான ம.சா.1 தனது முதன்மை சாட்சியத்தில் தனது மனுவினை ஒத்துரைத்து சாட்சியமளித்துள்ளார். ஆனால் 1–ம் எதிர்மனுதாரர் தரப்பில் ம.சா.1–ஐ குறுக்கு விசாரணை செய்தபோது ம.சா.1 தனது சாட்சியத்தில், **<u>".....முதல் தகவல் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள டி.என்.67 எப் 9162 என்ற இருசக்கர வாகனம் என்னுடையது என்றால் சரிதான். நான் தான் மேற்படி வாகனத்தை அதிவேகமாகவும், அஜாக்கிரதையாக ஓட்டி பழனி மகன் கருப்பையா மீது மோதி இறப்பை ஏற்படுத்தினேன் என்றால் சரிதான்....."</u>** என்றும், 2–ம் எதிர்மனுதாரர் குறுக்கு விசாரணையின்போது **<u>".....நான் தாக்கல் செய்துள்ள ஓட்டுனர் உரிமத்தின்படி இந்த விபத்திற்கு நான் தான் காரணம் என்பதால் மோட்டார் வாகன ஆய்வாளர் திண்டுக்கல் அவர்களால் என்னுடைய ஓட்டுனர் உரிமம் 21.11.2012 முதல் 21.02.2013 வரை Suspension செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி உத்தரவை எதிர்த்து நான் எவ்வித மேல்முறையீடும் செய்துகொள்ளவில்லை என்றால் சரிதான்....."</u>** என்றும் ஒப்புக்கொண்டு சாட்சியம் அளித்துள்ளார். மேலும் சம்பவத்தை கண்ணுற்ற சாட்சியாக திரு.செந்தில்குமார் என்பவர் ம.சா.2 ஆக விசாரிக்கப்பட்டு, அவர் தனது சாட்சியத்தில், **<u>".....குற்ற எண்.344/2012–ன்படி முதல் தகவல் அறிக்கையானது மனுதாரர் குமரேசன் மீது தான் பதியப்பட்டது என்றால் சரிதான். விபத்து நடந்த தேதியில் விபத்து நடந்த இடத்தில் நான் இருந்ததற்கு எந்த ஒரு ஆவணங்களும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.</u>** என சாட்சியமளித்துள்ளார். எனவே ம.சா.1 மற்றும் ம.சா.2 சாட்சியத்திலிருந்தும், ம.சா.ஆ.1 ஆவணத்திலிருந்தும், TN 67 F 9162 என்ற இருசக்கர வாகனத்தின் ஓட்டுனரான மனுதாரரின் கவனக்குறைவு தான் விபத்திற்கு காரணம் என்பதை உறுதிப்படுத்துகிறது. ம.சா.ஆ.1 வடமதுரை காவல் நிலையக் குற்ற எண்.344/2012 முதல் தகவல் அறிக்கையை பரிசீலிக்கையில், இறந்துபோன கருப்பையாவின் தகப்பனாரான 1–ம் எதிர்மனுதாரரான எ.ம.சா.1 கொடுத்த புகாரின்

பேரில் பதிவு செய்யப்பட்டுள்ளது. அதில் கண்ட விவரம் மனுவின் சங்கதிகளையும் ம.சா.1, ம.சா.2 சாட்சியங்களையும் உறுதிப்படுத்துவதாக அமைந்துள்ளது.

எனவே மேலே விவரித்த வகையில் ம.சா.1 மற்றும் ம.சா.2 சாட்சியங்களிலிருந்தும், ம.சா.ஆ.1 சான்றாவணத்திலிருந்தும் மனுதாரரின் கவனக்குறைவு தான் விபத்திற்கு காரணம் எனத் தெளிவாகிறது. எனவே TN 67 F 9162 என்ற இருசக்கர வாகனத்தின் ஓட்டுனரான மனுதாரரின் கவனக்குறைவு தான் விபத்திற்கு காரணம் என முடிவு செய்து, அவ்வாறே 1–வது பிரச்சனைக்கு இத்தீர்ப்பாயம் தீர்வு காண்கிறது.

10.2. மேலும் 2–ம் எதிர்மனுதாரைப் பொறுத்து இம்மனு நிலைக்கத்தக்கதா? என்பது குறித்து பரிசீலிக்கையில், 1–ம் எதிர்மனுதாரர் தரப்பில் TN 57 L 0022 என்ற இருசக்கர வாகனத்தின் காப்பீட்டுச் சான்று எ.ம.சா.ஆ.2 ஆக தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி ஆவணத்தைப் பரிசீலிக்கையில், 10.09.2011 முதல் 09.09.2012 வரையில் மட்டுமே காப்பீடு அமலில் இருந்து வந்துள்ளது என்பதும், விபத்து நடந்த தேதியான 06.10.2012 ஆம் தேதியன்று காப்பீடு அமலில் இல்லை என்பதும் தெரியவருகிறது. இதுகுறித்து எ.ம.சா.1 தனது சாட்சியத்தில், **"....நான் தாக்கல் செய்துள்ள எ.ம.சா.ஆ.2 ஆவணம் பாலிசி நகல் டி.என்.57 எல் 0022 பஜாஜ் பிளாட்டினம் நல்லமணி என்பவர் பெயரில் 10.09.2011 முதல் 09.09.2012 வரை காப்பீடு செய்யப்பட்டுள்ளதாக கண்டுள்ளது என்றால் சரிதான். விபத்து தேதியில் காப்பீடு இல்லை என்றால் சரிதான்....."** என சாட்சியம் அளித்துள்ளார். எனவே 2–ம் எதிர்மனுதாரரைப் பொறுத்து இம்மனு நிலைநிற்கத்தக்கதல்ல என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

10.3. மேலும், விபத்தை ஏற்படுத்திய சமயத்தில் TN 57 L 0022 என்ற இருசக்கர வாகனத்தின் ஓட்டுனராக இருந்த 1–ம் எதிர்மனுதாரரின் மகன் கருப்பையா மேற்படி விபத்தில் இறந்துவிட்டதாலும், TN 57 L 0022 என்ற இருசக்கர வாகனத்திற்கு 1–ம் எதிர்மனுதாரர் உரிமையாளர் அல்லது உடைமையாளர் என்பதற்கு எவ்வித சான்றுகளும் இல்லை என்பதாலும், மேற்படி விபத்திற்கு மனுதாரர் தான் காரணம் என இந்நீதிமன்றம் ஏற்கனவே தீர்வு காண்டுள்ளதாலும் இம்மனு எதிர்மனுதாரர்களைப்

பொறுத்து நிலைநிற்கத்தக்கதல்ல என்றே இத்தீர்ப்பாயம் முடிவு செய்து அவ்வாறே இவ்வினாக்களுக்கு தீர்வு காண்கிறது.

**13. தீர்மானிக்கப்படவேண்டிய வினா எண். 3–க்கான தீர்வு :–**

மேலே கண்ட வினா எண்கள்.1, 2–ல் கண்ட தீர்வின்படி TN 67 F 9162 என்ற இருசக்கர வாகனத்தின் ஓட்டுனரான மனுதாரரின் கவனக்குறைவினால் தான் 1–ம் எதிர்மனுதாரரின் மகன் கருப்பையா மேற்படி விபத்தில் இறந்துவிட்டதாக தீர்வு கண்டுள்ளதாலும், மேற்படி விபத்தில் இறந்துபோன 1–ம் எதிர்மனுதாரரின் மகன் கருப்பையா இறந்துவிட்டதால், இம்மனுவின் 1–ம் எதிர்மனுதாரர் தரப்பில் மோ.வா.வி.கோ.மனு எண்.324/2012 என்ற மனு தாக்கல் செய்யப்பட்டு, அம்மனுவில் இம்மனுவின் மனுதாரர் தான் மேற்படி விபத்திற்கு காரணம் என முடிவு செய்துள்ளதாலும், TN 57 L 0022 என்ற இருசக்கர வாகனத்திற்கு காப்பீடு அமலில் இல்லை என்பதாலும், மனுதாரருக்கு, எதிர்மனுதாரர்கள் இழப்பீட்டுத் தொகை வழங்க கடமைப்பட்டவர் அல்ல என்பதால் மனுதாரருக்கு எவ்வித இழப்பீடும் கிடைக்கத்தக்கதல்ல என இத்தீர்ப்பாயம் தீர்வு காண்கிறது.

முடிவாக இம்மனு தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை திருத்தம் செய்யப்பட்டு, 2026 ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 11 ஆம் நாள் இந்நீதிமன்றத்தில் தீர்ப்பு அவையறிய பகரப்பட்டது.

VISWANATHAN K

Digitally signed by VISWANATHAN K
Date: 2026.08.11 18:40:21 +0530

**மோட்டார் வாகன விபத்து கோரிக்கை தீர்ப்பாயர்,**
**மற்றும் சார்பு நீதிபதி, வேடசந்தூர்.**

| மனுதாரர் தரப்பு சாட்சி :– | | |
|---|---|---|
| வரிசை எண் | | சாட்சியின் பெயர் |
| ம.சா.1. | : | திரு. குமரேசன் – (மனுதாரர்) |
| ம.சா.2. | : | திரு. செந்தில்குமார் |

**மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள் : –**

| வ.எண். | தேதி | ஆவணப் பெயர் | ஆவணத் தன்மை |
|---|---|---|---|
| ம.சா.ஆ.1 | -- | மருத்துவ பில்கள் ரூ.67,813/-க்கான ஆவணங்கள் (எண்ணிக்கை 22) | அசல் |
| ம.சா.ஆ.2 | 07.10.2012 | வடமதுரை காவல் நிலைய முதல் தகவல் அறிக்கை | உண்மை நகல் |
| ம.சா.ஆ.3 | 15.10.2012 | ஜே.சி.பி. மருத்துவமனையின் அட்மிசன் மற்றும் டிஷ்சார்ஜ் சம்மரி | உண்மை நகல் |
| ம.சா.ஆ.4 | 02.12.2022 | மனுதாரரின் டிரைவிங் லைசன்ஸ் (அசலுடன் ஒப்பிட்டுப் பார்க்கப்பட்டது) | நகல் |
| ம.சா.ஆ.5 | 19.03.2021 | அரசு மருத்துவமனையில் கொடுக்கப்பட்ட ஊனச்சான்று | அசல் |

| எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி :- | | |
|---|---|---|
| **வரிசை எண்** | | **சாட்சியின் பெயர்** |
| எ.ம.சா.1. | : | திரு. பழனி – (1-ம் எதிர்மனுதாரர்) |
| எ.ம.சா.2. | : | திரு. ராமர் |

**எதிர்மனுதாரர்கள் தரப்பு சான்றாவணங்கள் : –**

| வ.எண். | தேதி | ஆவணப் பெயர் | ஆவணத் தன்மை |
|---|---|---|---|
| எ.ம.சா.ஆ.1 | 10.02.2020 | மோ.வா.வி.கோ.மனு எண்.324/2012 மனுவின் உத்தரவாணை | சான்றிட்ட நகல் |
| எ.ம.சா.ஆ.2 | --- | TN 57 L 0022-ன் இன்சூரன்ஸ் பாலிசி | ஒளி நகல் |
| எ.ம.சா.ஆ.3 | --- | TN 57 L 0022 என்ற வாகனத்திற்கான காப்பீடு | நகல் |

VISWANATHAN K

Digitally signed by VISWANATHAN K
Date: 2026.08.11 18:40:28 +0530

**மோட்டார் வாகன விபத்து கோரிக்கை தீர்ப்பாயர்,**
**மற்றும் சார்பு நீதிபதி, வேடசந்தூர்.**